**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1ம்வாதி ஆஜர்.2ம் வாதி ஆஜர் இல்லை . 1ம் பிரதிவாதி ஆஜர். 2முதல் 6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.856/2022

பி.வா.சா.1 விஸ்வநாதன் த/பெ ராசமுத்து

**வாதிதரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–**

1. என் தந்தை ராசமுத்து ஸ்ரீ அம்மன் பைனான்ஸ் பங்குதாரர் என்றால் சரிதான். நான் மற்றும் என் தந்தை அனைவரும் கூட்டுகுடும்பமாக வசித்து வருகிறோம். என் தந்தை ராசமுத்துவிற்க்கு பைனான்ஸ் நிறுவனத்தில் வரும் வருமானம் தவிர விவசாயத்திலும் வருமானம் உண்டு. நான் மற்றும் என்னுடைய சகோதரி ஆகியோர் என் தந்தைக்கு வாரிசுகள் ஆவோம்.

2. வா.சா.3 ஆவணமான கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணம் மற்றும் வா.சா.4 ஆவணமான கிரைய உடன்படிக்கை ஆவணங்கள் ஒரே நாளில் அடுத்தடுத்து ஆவணங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.3, வா.சா.4 ஆவணங்களை எழுதுவதற்க்கு பத்திர எழுத்தரிடம் யார்கூட்டிசென்றார்கள் என்றால் 1ம் வாதியான சரணவன் அழைத்து சென்றார்.

3. வா.சா.4 ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் போட்டேன். இந்த தாவா சொத்தை வாங்கும்போது சந்தை மதிப்பு எவ்வளவு என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் ரூ.4,00,000/–ஆகும். அந்த ரூ.4,00,000/– லட்சத்தில் ரூ.3,50,000/–த்தை முன்பணமாக கொடுத்து கிரைய உடன்படிக்கை செய்தேன். இந்த கிரைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்க்கு காலஅவகாசம் 3 வருடங்கள் ஆகும்.

4. கிரைய உடன்படிக்கையில் உள்ள வாசகங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கிரைய உடன்படிக்கை பக்கம் 3ல் 3 வருட காலத்திற்குள் கிரையம் பெறவில்லை என்றால் கிரைய முன்பணம் மற்றும் கிரைய உடன்படிக்கை பாத்தியத்தையும் இழந்துவிட நேரிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபோல் சரவணன் அந்த 3 வருடத்திற்குள் கிரைய செய்யமுன்வரவில்லை என்றால் நீதிமன்றத்தின்மூலம் கிரைய மீதி தொகைகொடுத்து கிரையம் செய்துகொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. கிரையம் பன்னுவதற்கு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வாய்வார்த்தை மூலம் கேட்டேன். முன்பணம் ரொக்கமாக கொடுத்தேன். வாதிகள் ஈரோட்டில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் என்ன தொழில் செய்துவருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து விற்பனை உள்ளது என்பதை ஆனந்தன் மூலமாக தெரிந்துகொண்டேன். அந்த ஆனந்தன் தான் வா.சா.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு ஆனந்தன் பழக்கம் வாதிகள் நேரடியாக பழக்கம் இல்லை. அதன்காரணமாக தான் வா.சா.4ல் ஆனந்தன் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்.

6. ஆனந்தன் என்ன தொழில் செய்துவருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆனந்ததன் என்னிடம் இருசக்கர வாகனம் வாங்க வருவார். நான் தவணை முறையில் இருசக்கர வாகனங்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறேன். அதன் வகையில் ஆனந்தன் எனக்கு பழக்கம் ஆகும். இந்த தாவா சொத்தை வாங்குவதை பொறுத்து வாதிகளிடம் நேரடியாக பேசினேனா என்றால் அலைபேசி மூலம் பேசினேன். ரங்கம்பாளையம் சார்பதிவளார் அலுவலகத்தில் இருந்து வாதிகள் வீடு சுமார் 5 கி.மீ சுற்றளவில் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

7. வா.சா.4 ஏற்படுத்தும்பொழுது நான் அலைபேசிமூலம் வாதிகளை அழைத்ததன் பெயரில் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் நான் சொன்ன நேரத்திற்க்கு வாதிகள் வந்தார்கள். வா.சா.5 ஆவணமானது சரவணன், சென்பகவள்ளி ஆகிய இருவரும் தமிழ்செல்விக்கு பொதுஅதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. இந்த தாவா சொத்து சம்மந்தமாக நான்

வெளியில் இருப்பதால் தமிழ்செல்விக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. தமிழ்செல்வி என்னுடைய மனைவி ஆவார்.

8. வா.சா.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 3 வருடகாலத்திற்குள் கிரையம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சரவணம் கேட்டு சரவணன் வராததால் அதன் காரணமாக தாமதம் ஏற்பட்டு 2022ல் பொதுஅதிகார பத்திரம்மூலம் கிரையம் பெறப்பட்டது. வா.சா.5 ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்கும்போது நான் என் மனைவியுடன் இருந்தேன்.

9. வா.சா.5 ஆவணத்தில் கலைச்செல்வி, நவீன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். கலைச்செல்வியை நான் பார்த்ததில்லை. நவீன் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவர். நவீன் ஆட்டோபைனான்ஸ்மூலம் எனக்கு அறிமுகமானவர். நவீனை சார்பதிவளார் அலுவலகத்திற்க்கு நான்தான் அழைத்துவந்தேன். 2ம்சாட்சி நவீனுக்கு வா.சா.5 ஆவணத்தை பற்றி தெரியும்.

10. வாதிகள் ஈரோட்டில் தான் இருந்தார்கள் என்பதால் சார்பதிவளார் அலுவலகத்திற்க்கு உடனே வந்துவிடலாம் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் வா.சா.5 ஆவணத்தை ஏற்படுத்த அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் வா.சா.5 ஆவணத்தை வாதிகள் தான் விருப்பபட்டு எழுதிக்கொடுத்தார்கள். வா.சா.4 ஆவணத்தின்படி 3 வருடத்திற்குள் கிரையம் பெறப்படுவில்லை என்பதால் வா.சா.5 ஆவணத்தின்மூலம் வா.சா.6 ஆவணமான கிரையம் ஏற்படுத்திக்கொண்டது செல்லாது என்றால் சரியல்ல.

11. கிரையம் எவ்வளவுக்கு எழுதப்பட்டது என்றால் ரூ.4,00,000/−க்கு சுத்தகிரையமாக எழுதப்பட்டு ரூ.4,90,000/−த்திற்கு மதிப்பு போடப்பட்டுள்ளது. தாவா சொத்து என் சொந்த பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டது. வா.சா.4 ஆவணத்தில் சரத்துக்கள் படி 3 வருடத்திற்குள் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் கிரைய மதிப்பு ரூ.4,00,000/− என்று இருக்கையில் அதற்கான Guideline value மதிப்பு ரூ.4,90,600/− என்று மதிப்பிட்டு அதற்குண்டான பதிவு கட்டணம் மற்றும் பத்திர மதிப்பு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. அவசரமாக வா.சா.6 ஆவணம் தேவைப்பட்டதால்தான் ரூ.4,00,000/− என்று கிரைய மதிப்பு இருக்கையில் அதற்கான Guideline value மதிப்பு ரூ.4,90,600/− க்கு கட்டணம் செலுத்தி பத்திரம் சார்பதிவாளர் அலுவகலத்தில் இருந்து திரும்பபெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.6 ஆவணம் பதிவு

செய்யும்போது மீதி கிரைய தொகையை வங்கிமூலமாகவோ அல்லது ரொக்கமாகவோ கொடுத்தேனா என்றால் ரொக்கமாக தமிழ்செல்விமூலமாக கொடுத்தேன்.

13. இந்த வழக்கில் தமிழ்செல்வியை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கிறீர்களா என்றால் இல்லை. ஒருவேலை வாதிகள் தரப்பு சாட்சியாக தமிழ்செல்வியை விசாரிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. எனது தரப்பில் வேறுசாட்சிகள் விசாரிக்க உள்ளீர்களா என்றால் என் வழக்கறிஞரை கலந்து சொல்கிறேன். வா.சா.6 ஆவணம் தண்டாயுதபாணி என்ற பத்திரஎழுத்தாளர்மூலம் எழுதப்பட்டது. நான் தான் என் மனைவியான தமிழ்செல்வி பொதுஅதிகாரமுகவரை மேற்கண்ட பத்திரஎழுத்தரிடம் அழைத்துசென்றேன்.

14. வா.சா.3 மற்றும் வா.சா.4 ஆவணங்கள் எழுதப்பட்ட பத்திர எழுத்தாளரிடம் சென்றால் வாதிகளுக்கு தகவல் சொல்லிவிடுவார் என்ற காரணத்தினால் நான் தண்டபாணி பத்திர எழுத்தரிடம் சென்று மோசடியாக வா.சா.6 ஆவணம் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.